[1981 மார்ச் 30

ஆத்தூர் நகராட்சி குடிநீர்த் திட்டம்.

*வினா எண் 553—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூபாய் 23 கோடி.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து, சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மதிப்பீடு தயார் செய்யப் பெற்ற நிலையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1978 ஆம் ஆண்டிலேயே, இந்த மன்றத்திலேயே இதுபற்றிய விவாதம் எழுந்தபோது, அது உடனடியாக மேற்கொள்ளப்படும், எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. இந்தக் திட்டத்திற்கு இதுவரையிலும் எந்தவிதமான செயலும் செய்யப் பெறவில்லை. விரைவில் ஆத்தூருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக முனைப்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய குடிநீர் பற்றாக் குறையைப் போக்க மண்வளர்ந்தான் கிராமத்தில் துவக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்தும், நரசிங்கபுரத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்தும் தண்ணீர் எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஆத்தூருக்கு குடி நீர் பற்றாக்குறையை நிரந்தரமாக நீக்குவதற்கு சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காவிரி நதியிலிருந்து நீர் கொண்டு வரும் ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆய்வின்—பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால், மேச்சூர், ஓமலூர், சேரமங்கலம், ஊதிகொண்டாரன் பட்டி, சேலம் மற்றும் வழியிலுள்ள கிராமங்கள் அனைத்தும் பயன் அடையும்.